# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.117/2017 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா–03 (PW–03) |
| பெயர் | :– | ஸ்டாலின் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

2025–ஆம் ஆண்டு ஜூலைதிங்கள் 02 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.

சான்றாளரின் கையொப்பம்

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் சேலம் கன்னங்குறிச்சியில் ஐட்ச் சாலையில் சக்தி நகரில் 2 ஆம் குறுக்கு தெருவில் வசிக்கிறேன். நான் Fast track வாடகை வண்டி ஓட்டுகிறேன். சான்றாளர்கள் ஷாபீக் அகமது, ஹாரிஸ் ஆகியோரை தெரியாது. நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை தெரியாது. சுமார் 7 ஆண்டுகளுக்குமுன் ஒரு நாள் சேலம் 5 சாலை பகுதியில் உள்ள ஜென் என்ற பட்டறைக்கு என் மகிழுந்தை பழுதுநீக்க கொண்டுசென்றேன். வழக்கமாக அந்த பட்டறையில்தான் வாகனத்தை சரிசெய்வேன். வண்டி தயாராக இருப்பதாக எனக்கு தகவல் சொன்னார்கள். அன்று எனக்கு உடல் நலகுறைவு என்பதால் மருத்துவமனையில் இருந்தேன். சிறிது நேரத்தில் வருவதாக சொன்னேன். மாலை சுமார் 6.00 மணியளவில் சென்றேன். எனக்கு மயக்கமாக இருந்தது. உள்ளே அமர்ந்திருந்தேன். பட்டறையில் இருந்தவர் வெளியில் சண்டையாகிவிட்டது என்று சொன்னார். வேறு சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் சண்டை போட்டுகொண்டு வெட்டிக்கொண்டார்கள் என்று பட்டறைகாரர் சொன்னார். புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

சான்றாளர்கள் சாபிக் அகமது, ஹாரிஸ் ஆகியோரை எனக்கு தெரியும் என்றும் 25.04.2016 ஆம் நாள் மாலை 5.00 மணிக்கு ஜென் பட்டறைக்கு நீங்கள் சென்றபோது அங்கு மேற்சொன்ன இருவரும் இருந்ததாகவும் அவர்களுடன் மணி என்கிற இளமுருகனும் அவருடைய நண்பர்கள் கமலகண்ணன், கலைசெல்வன் ஆகியோர்கள் இருச்சக்கர வாகனத்தில் வந்ததாகவும் மணி, சாபிக் அகமது, ஹாரிஸ் ஆகியோர் பட்டறையின் உள்ளே மகிழுந்து ஒன்றை பார்த்துக்கொண்டிருந்தாதாகவும் கமலகண்ணும், கலைசெல்வனும் வெளியே நின்றுகொண்டிருந்ததாகவும் மணிக்கு அழைப்பு வந்து அவர் இருச்சக்கர வாகனத்தை

எடுத்துக்கொண்டு வெளியே சென்றதாகவும் ஏன் அவ்வாறு செல்கிறார் என்று பார்க்க நாங்கள் வெளியே வந்தோம் என்றும் அப்போது மேட்டுரை சேர்ந்த பிரகாஷ் என்கிற ஜெயபிரகாஷ் என்பவரும் பார்த்தால் அடையாளம் செய்யகூடிய சுமார் அறுவரும் முதன்மை சாலையில் மணி சென்ற இருச்சக்கர வாகனத்தை மறித்து மணியை கையில் வெட்டினார்கள் என்றும் மணி அலறிக்கொண்டு கீழே விழுந்தார் என்றும் அந்த நபர்கள் மணியை வெட்ட வந்ததும் மணி எழுந்து நீங்கள் நின்ற பட்டரையை நோக்கி வேகமாக ஓடிவந்தார் என்றும் அந்த கூட்டத்தில் இருந்த ஒருவர் பிரகாஷ் அவனை விடாமல் வெட்டி சாயுங்கள் என்று கத்தினார் என்றும் நீங்கள் நின்ற இடத்தில் மணியை மறித்து அவர்கள் மாறிமாறி வெட்டினார்கள் என்றும் மணி அந்த இடத்திலேயே இறந்துபோய்விட்டார் என்றும் புலனாய்வின்போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.